



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita





## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



பல ஸூக்ஷ்ம விஷயங்களை சாஸ்த்ரங்கள் மனிதனுக்குப் போதிக்கின்றன. ஸூக்ஷ்ம விஷயங்கள் என்றால் மனிதன் புத்திக்கு சீக்கிரமாக எட்டாத விஷயங்கள். அந்த விஷயங்கள் ஒருவனுக்கு மிகச் சாதாரணமாகக்கூடத் தோன்றலாம்.



சில விஷயங்களை மறந்துபோகும் வாய்ப்புக்களும் இருக்கின்றன. உதாரணமாக, ஒருவனுக்குக் கோபம் வரும் பொழுதோ அல்லது அவனுக்குப் பிடிக்காதது ஏதாவது நடந்துவிட்டாலோ உடவே வேறு ஒருவன் மேல் பழிபோட ஆரம்பித்துவிடுவான். மேலும் போக்கூடாத வார்த்தைகளால் திட்டிவிடுவான். கோபம் தணிந்ததும் தான் அப்படித் திட்டியிருக்கக்கூடாது என்று புரியவரும். ஆனால் அதற்கு முன்பே சொல்லம்புகளாய் தாக்கப்பட்டவன் மனதில் அந்த வார்த்தைகள் மிகவும் ஆழமாகப் பதிந்து இதயத்தையே உடைந்துவிடும். அவன் இரவும் பகலும் வருத்திக்கொண்டே இருப்பான். ஆகையால் ஒருவரும் மற்றவரை சுடுஞ்சொற்களால் புண்படுத்தக்கூடாது.

वाक्सायका वदनान्निष्पतन्ति यैराहतश्शोचति रात्र्यहानि।
परस्य नामर्मसु ते पतन्ति तान् पण्डिती नावसृजेत् परेभ्यः।।
வாக்ஸாயகா வத³னாந்நிஷ்பதந்தி யைராஹதஶ்ஶோசதி ராத்ர்யஹானி|
பரஸ்ய நாமர்மஸு தே பதந்தி தான் பண்டி³தீ நாவஸ்ரு’ஜேத் பரேப்⁴ய: |\

பாணத்தால் அடிபட்டவனின் புண்கூட விரைவில் ஆறிவிடும். அதேபோல் கோடாலியால் வெட்டப்பட்ட காட்டுமரமும் திரும்ப வளர ஆரம்பித்துவிடும். ஆனால் கடுஞ்சொற்களால் உண்டாகும் புண் ஆறாது. மனிதனுக்கு எந்த ஸந்தர்பத்திலும் வாக்சுத்தி இருக்கவேண்டும் என்று சாஸ்த்ரம் போதிக்கிறது.


# Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

रोहते सायकैर्विद्धं वनं परशुना हतम्।
चाचा दुरुक्तं बीभत्सं न संरोहति वाक्षतम्।
ரோஹதே ஸாயகைர்வித்³த‘ம்’ வனம்’ பரஶுனா ஹதம் |
சாசா து³ருக்தம்’ பீ³ப‘த்ஸம்’ ந ஸம்’ரோஹதி வாக்ஷதம் ||

இதை நன்றாகப் புரிந்துகொண்டு ஒருவர் மற்றொருவரை எந்தவிதத்திலும் புண்படுத்தாமல் இருக்கவேண்டும் என்று கூறி எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.

நன்றி - அம்மன் தரிசனம்

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அம்ருத துளிகள்

நாம் எவ்வளவு புத்திசாலிகள் ஆனாலும் ஈச்வரனின் அனுக்ரஹம் இல்லாவிட்டால் நம்முடைய காரியம் பலிக்காது என்று சொல்கிறோம். நம்முடைய முன்னோர்கள் ரொம்பவும் விவேசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். மனிதனுடைய வாழ்க்கை ஒரு ரதம் போல் இருக்கிறது. ரதத்திற்கு இரண்டு பக்கங்களிலும் இரண்டு சக்கரங்கள் வேண்டும். அந்தச் சக்கரங்களில் எந்த ஒரு சக்கரம் இல்லாவிட்டாலும் ரதம் செல்லாது. மனுஷ்யானுடைய வாழ்க்கை என்ற ரதத்திற்கு இருக்கக்கூடிய இரண்டு சக்கரங்கள் என்னவென்று கேட்டால், ஒன்று நம்முடைய பிரயத்னம், இன்னொன்று ஈச்வரனுடைய அனுக்ரஹம். இந்த இரண்டு சக்கரங்களில் நம்முடைய வாழ்க்கை என்கிற ரதம் போய்க் கொண்டிருக்கிறது. நாம் ஒரே சக்கரத்தினால் அந்த ரதத்தை ஓட்ட வேண்டும் என்று பார்க்கிறோம். முடிவதில்லை. அதனால்தான் சிலருக்கு அதிருஷ்டத்தில் நம்பிக்கை இல்லாமல், “நான் நினைத்தால் என்ன வேண்டுமானாலும் சாதிப்பேன்” என்கிற அஹங்காரம். இது தவறு, சிலருக்கும், “ஈச்வர ஸங்கல்பம் இருந்தால் எல்லாம் நடக்கும்,

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# தேவி வழிபாடு

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த ஹாஸ்வாமிகள்)

## ஸ்ரீ வித்யையின் ஶக்தி

மந்த்ரம், யந்த்ரம் மற்றும் தந்த்ரம் ஸ்ரீவித்யா முக்கோ-ணத்தின் மூன்று மூலைகளை உருவாக்குகின்றன. மந்திரத்-தில் யந்திரம் காட்சிப் படுத்தப் படுகின்றது. யந்திரத்தின் வழிபாடு, உள் மற்றும் வெளிப்புறம், மற்றும் குண்டலினீ யோகம் மற்றும் பிற சாதனங்களின் பயிற்சி ஆகியவை தந்திரம் ஆகும். ஸ்ரீவித்யாவின் முக்கிய மந்த்ரம் பஞ்சதஶாக்ஷரீ (15 எழுத்துக்கள்) மற்றும் பிரதான மந்த்ரம், யந்திரம் மற்றும் தந்திரத்தின் அடையாளத்தை தேவியைத் தன்னுடன் தியானிப்பதாகும். ஶக்தி வழிபாடு புரிதலுடனும், பாராட்டுதலுடனும், இதயத்தில் அன்புடனும் செய்யப் பட்டால், மந்திரம், யந்திரம், பிரசாதம், பூஜையின் நடைமுறை மற்றும் சாதனங்கள் அனைத்தும் சித் ஶக்தியின் வடிவங்-களாகவும் வெளிப்பாடுகளாகவும் மாற்றப் படுகின்றன. சாதாரண அனுபவத்தின் பொருட்கள் மற்றும் செயல்களை தெய்வீகத் தாயின் நாடகம், ஶக்தி மற்றும் பேரின்பத்தை வெளிப்படுத்தும் வடிவங்களாக மாற்றுவதே பொருள்.

சௌந்தர்யலஹரீ கூறுகின்றது – உபாசகர் ஆத்மார்ப்-பணத்தைப் பின்பற்றினால், சாதாரண பேச்சு ஜபமாக (மந்த்ரங்களை உச்சரிப்பது), கையால் இயல்பான வேலை முத்ரைகளாக ஆகவும், நடைபயிற்சி பிரதக்ஷிணமாவும், சாப்பிடுவது ஹோமமாகவும் (பிரசாதம்), படுத்துக் கொள்வது நமஸ்காரமாகும். உண்மையில் எந்த செயலும் இயற்கையாகவே செய்யப் படுவது வழிபாடாக மாற்றப் படுகின்றது. ஸ்ரீவித்யா உபாசகர் சில துறைகளைப் பின்பற்ற வேண்டும். அவர் மற்ற பாதைகளில் தவறு கண்டு பிடிக்கக் கூடாது அல்லது அவற்றை விமர்சிக்கக் கூடாது, அதே நேரத்தில் தனது சொந்தத்தில் உறுதியாக இருக்க வேண்டும். ஜப நடைமுறை எல்லா நேரங்களிலும் ஒரு மின்னோட்டமாக செல்ல வேண்டும். அவர் உதவி கேட்கவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ கூடாது. அவர் உலகில் தனது கடமைகளையும், தெய்வ வழிபாட்டையும் பலங்களுடன் அதிகம் இணைக்காமல் செய்ய வேண்டும். அவர் அச்சமின்றி இருக்க வேண்டும். அவர் சுயநல இன்பத்தின் நோக்கத்துடன் செல்வத்தையும் உடைமை-களையும் பெறக் கூடாது, மேலும் அவர் ஸ்வயத்தை உணர்ந்து கொள்வதை விட உயர்ந்ததாக எதையும் கருதக் கூடாது.

ஶக்தி வழிபாடு சரியாக புரிந்து கொள்ளப் படுவது ஒரு தொகுப்பு மற்றும் நல்லிணக்கமாகும். இதில் மனித முயற்சிகளின் மாறுபட்ட மற்றும் சில நேரங்களில் முரண்பாடான போக்குகள் இடமளிக்கப் படுகின்றன. மேலும் ஒவ்வொன்றும் ஒன்றிணைந்து அதன் முழுமை-யான வளர்ச்சியையும் திருப்தியையும் உறுதிப் படுத்து-கின்றது. ஸ்ரீவித்யாவில் ஒரு திறமையானவர் இதயத்தில் ஒரு ஶக்தி, கண்ணோட்டத்தில் ஒரு ஶவர் மற்றும் நடைமுறையில் ஒரு வைணவர். இத்தகைய நல்லிணக்கம் அவசியம் சாத்தியம் – யுகத்தின் அவதார புருஷரான ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் நமக்கு வெளிப் படுத்தியது. பக்தியுடன் பின்பற்றப் படும் அனைத்து பாதைகளும் ஒரே கடவுளுக்கு இட்டுச் செல்கின்றன, மந்திரங்கள் செயல்திறன் மிக்கவை, யந்திரங்கள் ஶக்தி வாய்ந்தவை, தேவதைகள் மற்றும் உயர் ஶக்திகள் கிடைக்கின்றன, சித்திகள் தானாகவே வந்து சேர்கின்றன, படிப்படியாக தெய்வீகத் தாய் சாதகனை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்கின்றார் என்பதை அவர் நிரூபித்துள்ளார். சாதகர் இலக்கை அடையும் வரை முழுமையின் அளவுகள்.

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

### 6. ராமேசுவர யாத்திரை



ராமனாதபுரம் ஸம்ஸ்தானத்தில் வெகுநாளாக ராஜ ராஜேசுவரி ஆலயமேற்பட்டு நவராத்திரியில் ஒரு தினம் ஸஹஸ்ர பூஜை என்ற பெயரால் ஆயிரம் ஜீவஜந்துக்களை பலிகொடுக்கிறதென்ற வழக்கமிருந்து வந்தது. இதை மாற்றவேண்டுமென்று ஸேதுபதியவர்களுக்குத் தோன்றி ஸ்ரீமத் ஆசார்யாரவர்களிடம் கேட்டதில் மறுநாள் பதில் சொல்வதாகச் சொல்லிவிட்டார்கள். அன்றிரவு ஸ்ரீஸ்வாமிகளவர்களுக்கு ஸ்வப்னத்தில் ஒரு பிராஹ்மணியல்லாத ஸ்திரீ தன் ஒரு கையில் மத்யபாத்திரமும், மற்றொன்றில் துடைப்பமும் வைத்துக்கொண்டு அழுக்கடைந்த வஸ்திரத்துடன் தோன்றி "போகிறேன்" என்று சொன்னதாகவும், சில நிமிஷங்கள் கழித்து ஸர்வாலங்கார பூஷிதையாய் ஒரு பிராஹ்மண ஸுமங்கலி "வந்தேன்" என்று சொன்னதாகவும் தோன்றிற்று. இதையே அம்பிகையின் உத்தரவு என்று தீர்மானித்து மறுநாள் ராஜரிடம் சொன்னார்கள். அதன்பேரில் மடத்து வித்வான்களை அனுப்பி ராஜராஜேச்வரி மூர்த்தியின் கலாகர்ஷணம் செய்வித்து வேதோக்தவிதானப்படி ஸ்ரீ சக்ர யந்திரத்தை ஸ்தாபித்து ராஜராஜேச்வரி அம்மனுக்கு சரப்பிரதிஷ்டை செய்வித்து தாமே அங்கு விஜயம்செய்து பூஜைசெய்தார்கள். அவ்வாலயத்திற்குத் தனியாக ஆவரணம் கல்பித்து நித்ய பூஜாதிகளுக்காக வருஷம் ஒன்றுக்கு பன்னிரண்டாயிரம் ரூபாய் வருமான முள்ளதொரு கிராமத்தையும் ராஜனால் கொடுப்பித்து, அங்கே பூஜைக்காக மடத்திலிருந்தே இரண்டு பிராஹ்மணர்களை நியமித்து, ராஜனுக்கும் பிரஜைகளுக்கும் விசேஷ அனுக்ரஹத்தைச் செய்தார்கள். அந்த ராஜன் மிகவும் உதாரியாயிருந்தபடியால் மிகவும் கடன்பட்டு பின்வாரிசுகளுக்கு ஸம்ஸ்தானம் தக்காதென்று தோன்றக்கூடிய நிலையிலிருந்த விஷயத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் தெரிந்து கொண்டு ராஜனிடம் அவர் ராஜ்யத்தை தனக்கு குரு தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். உடனே வெகு ஸந்தோஷத்துடன் அந்த ராஜனும் அப்படியே அர்ப்பணம் செய்து விட்டார். மறுதினம் அரண்மனையில்

தர்பார் கூட்டி, அதற்கு ஸகல பரிவாரங்களுடன் ஸ்ரீஸ்வாமிகள் விஜயம்செய்து அந்த ஸபையில் ராஜ குமாரரான ராஸேசுவர முத்துராமலிங்க ஸேதுபதியை வரவழைத்து, நேற்று ராஜன் தனக்கு குருதக்ஷிணையாகக் கொடுத்த ராஜ்யத்தை தான் அனுக்ரஹ புரஸ்ஸரமாக ராஜ குமாரருக்கு கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள்.

இவ்விதம் அந்த ஸம்ஸ்தானத்தை ரக்ஷித்துக் கொடுத்தார்கள். ராஜனுடைய நிர்ப்பந்தத்திற்கு கட்டுப்பட்டு ஐந்து கிராமங்களை மாத்திரம் ஸ்ரீமடத்தில் வைத்துக்கொள்ள ஸம்மதித்தார்கள். பாஸ்கர ஸேதுபதியவர்களுக்கு ரத்னமயமான சிரோபூஷணம் கொடுத்து அவரையும் அவர் குடும்பத்தார்களையும் விசேஷமாக அனுக்ரஹித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்கள்.

அங்கிருந்து கோவிலூர் வந்து தங்கின ஸமயம் மைசூர் மஹாராஜா சாமராஜ பிரபுக்கள் கல்கத்தா போயிருந்த இடத்தில் காலகதியடைந்துவிட்டார் என்கிற ஸமாசாரம் தெரிந்தது. பிறகு திருநெல்வேலி ஜில்லாவில் பிரவேசம்செய்து அங்கங்கு கிராமங்களில் சிஷ்யர்களுக்கு அனுக்ரஹம் செய்து கொண்டு ஜய வருஷம் (1895) மாக பகுள த்விதீயையன்று திருநெல்வேலிக்கு ஸமீபத்திலுள்ள தாம்ரபர்ணீ நதி தீரத்தில் இருக்கும் ஸந்த்யா மண்டபத்திற்கு வந்தார்கள். அங்கு ஆயிரக்கணக்கான பிராஹ்மணர்கள் கூடியிருந்தார்கள். நதீ தீரத்திலேயே ஸ்வர்ணப் பல்லக்கில் ஸ்ரீ ஸ்வாமிகளை ஆரோஹணம் செய்வித்து பிராஹ்மணர்களே பல்லக்கைத் தூக்கிக்கொண்டு வாத்ய கோஷங்களுடனும், வேத கோஷங்களுடனும், மங்களார்த்திகளுடனும் மிக உத்ஸாஹத்துடன் எல்லா வீதிகளிலும் உத்ஸவம் நடத்தி திருநெல்வேலியிலுள்ள சாலிவாடிசுவரர் தேவஸ்தானத்தில் வஸதி செய்வித்தார்கள். பக்கத்து கிராமங்களிலுள்ளவர்களும் அங்கேயே தர்சனத்திற்கு வர வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. அப்படியே கொஞ்ச நாளிருந்து சிஷ்யர்களை அனுக்ரஹித்துவிட்டு தாம்ரபர்ணீ நதியின் மூலஸ்தானமான பாணதீர்த்தத்திற்கு விஜயம் செய்தார்கள். அந்த ஸ்தலம் சிங்கம்பட்டி ஜமீன்தாரின் ஸ்வாதீனத்திலிருந்தபடியால் அவரே வேண்டிய அனுகூலங்களை செய்துகொடுத்தார்கள். அவருக்கு "தீர்த்தபதி" என்ற பிருதும் கொடுத்து புத்திர ஸந்தானமேற்படும்படி அனுக்ரஹித்தார்கள். அங்கிருந்து அதிக வேகமாகவே யாத்திரையை நடத்திக்கொண்டு அய்யம்பாளையம் வந்து சேர்ந்தார்கள். அங்கு மன்மத வருஷம் சைத்ர பகுள தசமி (19-4-1895) வெள்ளிக் கிழமையன்று ஸ்ரீமத் ஆசார்யார் ஆக்ஞைப்படி தண்டாயுதபாணி ஸுப்ரஹ்மண்யர், பிரஸன்ன பார்வதீ ஸமேத பிரஸன்ன பரமேசுவரர், ஸ்ரீநிவாஸர் இவர்களுடைய மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. பிரதிஷ்டையானவுடன் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களே தேவாலயம் சென்று பூஜைகள் செய்து பக்த சிகாமணியான தாண்டவராய பிள்ளைக்கும், மற்றும் கூடியிருந்த சிஷ்யர்களுக்கும், தீர்த்தம் முதலான பிரஸாதம் கொடுத்து அனுக்ரஹித்தார்கள்.

(தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ॥ श्रीगणेशभुजङ्गम् ॥

.. ஶ்ரீக³ணேஶபு⁴ஜங்க³ம் ..

ध्वनिध्वंसवीणालयोल्लासिवक्त्र स्फुरच्छुण्डदण्डोल्लस द्वीजपूरम् ।
गलद्दर्पसौगन्ध्यलोलालिमालं गणाधीशमीशानसूनुं तमीडे ॥ २ ॥
த்⁴வநித்⁴வம்'ஸவீணாலயோல்லாஸிவக்த்ர ஸ்பு²ரச்சு²ண்ட³த³ண்டோ³ல்லஸ த்³வீஜபூரம்|
க³லத்³த³ர்பஸௌக³ந்த்⁴யலோலாலிமாலம்' க³ணாதீ⁴ஶமீஶானஸூனும்' தமீடே³ ||2||

ध्वनि {த்⁴வனி} = தன்னுடைய இனிய ஒலியால்; ध्वंस {த்⁴வம்'ஸ} = மறைந்த; वीणालय {வீணாலய} = வீணையின் லயத்தினால்; उल्लासि {உல்லாஸி} = விளங்குகின்ற; वक्त्रं {வக்த்ரம்'} = முகத்தையுடையவரும்; स्फुरत् {ஸ்பு²ரத்} = அசைகின்ற; शुण्डदण्ड {ஶுண்ட³த³ண்ட³}= துதிக்கையில்; उल्लसत् {உல்லஸத்} = அழகாகத் திகழ்கின்ற; भीजपूरम् {பீ⁴ஜபூரம்} = மாதுளம்பழத்தை உடையவரும்; गलद्दर्पस्सौगन्ध्य लोलालिमालं {க³லத்³த³ர்பஸ்ஸௌக³ந்த்⁴ய லோலாலிமாலம்' = பெருகுகின்ற மதஜலத்தின் வாசனையால் சஞ்சலமான வண்டின வரிசையையுடையவரும்; गणाधीशं {க³ணாதீ⁴ஶம்'} = கணங்களுக்கு அதிபருமான; तं ईशानसूनुं {தம்' ஈஶானஸூனும்'} = ஈச புத்திரனை; ईडे {ஈடே³} = போற்றுகிறேன்.



கணேசன் நடனமாடும் சமயத்தில் இனியகானம் செய்கின்றார். அக்கானத்தின் மதுரத்வனியால் வீணையின் நாதம் கூடத் தோற்கடிக்கப்படுகின்றது. அப்பொழுது அவரது முகம் மிகவும் பொலிவுபெற்றுப் பார்ப்பவர் மனதைக் கவர்கின்றது .மேலும் அவர் தன் கையில் இனிய மாதுளம் பழத்தையும் வைத்துக்கொண்டு காட்சியளிக்கின்றார். ஆடலும் பாடலும் அவருக்கு அளவுகடந்த மதத்தையுண்டு பண்ணுகின்றன. ஆதலால் அவருடைய மத்தகத்தில் மதப்பெருக்குண்டாகி எங்கும் இனிய நறுமணத்தைப் பரப்புகின்றது. அதனால் வண்டினம் மற்ற மலர்களைத் தேடித் திரிவதை விடுத்து இவரது முகத்தைச் சுற்றி வட்டமிடுகின்றது. இவ்வாறு அவருடைய முகத்தைச்சுற்றித் திரியும் வண்டுகளின் வரிசை அவருக்கு அளிக்கப்பெற்ற மலர் மாலை போல் விளங்குகின்றது. அப்படிப்பட்ட கரிமுகத்தோனை யான் போற்றுகின்றேன். (தொடரும்)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## ||ஸிவபக்தி கல்பலதிகா||

ஶ்ரீ ஶ்ரீதர ஐயாவாள்

त्वद्भक्त्यसम्भवशुचं प्रतिकारशून्यां
अन्तर्वहन्निखिलमीश सुखञ्च दुःखम् ।
उद्वन्धलम इव दुःखतयैव मन्ये सन्ताम्यतीति मयि
हन्त कदा दयेथाः ।।



த்வத்³ப⁴க்த்யஸம்ப⁴வஶுசம்’
ப்ரதிகாரஶூன்யாம்’ அந்தர்வஹந்நிகி²லமீஶ
ஸுக²ஞ்ச து³:க²ம் |
உத்³வந்த⁴லம இவ து³:க²தயைவ மன்யே
ஸந்தாம்யதீதி மயி ஹந்த கதா³ த³யேதா²:
||10||

ஈசனே ! உமது பக்தி கிட்டாததால் உண்டாகிற இந்த துன்பம், துக்கம் போன்றவற்றிற்கு எந்த விதமான பரிகாரமும் இல்லை. அது அனைத்தையும் உள்ளத்தில் சுமக்கும் நான் ஸுகத்தையும் துக்கத்தையும் தூக்கில் மாட்டிக் கொண்டவன் போல துக்கமாகவே கருதுகிறேன் . அதுவே என்னை வாட்டி எடுக்கிறது. என்று தான் எனக்கு ஐயனே இதில் இருந்து விடுதலை. எப்போது என்னிடம் நீர் கருணை காட்டுவீர் ?

भक्तिं भवत्यविहतां वहतस्तु तद्वि- शेषोपलम्भविरहाहितमस्तु दुःखम् ।
तस्याः प्रतीपततिभिर्हतिजं कथं वा दुःखं सहे मयि कदेश कृपा भवेत्ते ।।

ப⁴க்திம்’ ப⁴வத்யவிஹதாம்’ வஹதஸ்து தத்³வி- ஶேஷோபலம்ப⁴விரஹாஹிதமஸ்து
து³:க²ம் |
தஸ்யா: ப்ரதீபததிபி⁴ர்ஹதிஜம்’ கத²ம்’ வா து³:க²ம்’ ஸஹே மயி கதே³ஶ க்ரு’பா ப⁴வேத்தே
||

என்னை ஆண்ட சிவபெருமானே ! உம்மிடம் தடையற்ற பக்தியைப் பெற்ற எனக்கு அதன் உயர்நிலை வந்து சேராததால் மனத்துக்கு ஆறுதல் இல்லாத துன்பம் ஒரு புறம் வருவது இருக்கட்டும், அந்த பக்தியின் வருகைக்கே உண்டான இடையூறுகளின் பரம்பரையால் நன்கு அடிப்பட்டதால் உண்டான வருத்தத்தை நான் எப்படித்தான் பொறுத்துக் கொள்வேன் ? என் விஷயத்தில் உன்னுடைய கருணையும், க்ருபையும் எப்பொழுது உண்டாகும் ? (11) (தொடரும்)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# सन्ध्यावन्दनम्

## ஸந்த்⁴யாவந்த³னம்

[சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அருளிய விளக்கங்களுடன்]

ஸந்த்யா என்ற சொல்லின் பொருள் :

ஸந்த்யா என்றால் ஸச்சிதானந்த வடிவான பரம்பொருளின் ஞானசக்தி. இதைப் புராணங்கள்,

या सन्ध्या सा जगत्सूतिर्मायातीता हि निष्कला ॥

ऐश्वरी केवला शक्तिस्तत्त्वत्रयसमुद्भवा ।

ध्यात्वाऽर्कमण्डलगतां सावित्रीं वै जपन्बुधः । (कूर्मपुराण २.१८.२६-२७)

யா ஸந்த்⁴யா ஸா ஜக³த்ஸூதிர்மாயாதீதா ஹி நிஷ்கலா ||

ஐஶ்வரீ கேவலா ஶக்திஸ்தத்த்வத்ரயஸமுத்³ப⁴வா |

த்⁴யாத்வா(அ)ர்கமண்ட³லக³தாம்' ஸாவித்ரீம்' வை ஜபன்பு³த⁴: |

(கூர்மபுராண 2.18.26-27)



"எவள் உலகின் தாயோ, மாயைக்கு அப்பாற்பட்டவளோ, பகுதியற்றவளோ, ஈஸ்வரனின் சக்தியானவளோ, மும்மூர்த்தித் தத்வங்களிலிருந்து உண்டானவளோ, அவள்தான் 'ஸந்த்யா' என்று அழைக்கப்படுகிறாள்". "கதிரவனில் உள்ள ஸாவித்ரீயை (ஸந்த்யையை) த்யானம் செய்து புத்திமான் காயத்ரீ மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும்." என்று விளக்கிக் காட்டுகின்றன. எப்படி ஸந்த்யா என்கிற சொல்லுக்கு ஸந்த்யா தேவதை என்கிற அர்த்தமோ அதேபோல் ஸந்த்யாவந்தனம் என்றால் ஸந்திகளில் செய்யவேண்டிய கர்மா என்று பொருள். ('ஸந்திகள்' என்பவை 'ஸந்த்யா செய்யும் காலம்' என்னும் தலைப்பின் கீழ் விளக்கப்பட்டிருக்கின்றன).

सन्धौ भवा सन्ध्या (सायण-वेदभाष्य, षड्विंशब्राह्मण ५.५.४)

ஸந்தௌ⁴ ப⁴வா ஸந்த்⁴யா (ஸாயண-வேத³பா⁴ஷ்ய, ஷட்³விம்'ஶப்³ராஹ்மண 5.5.4)

"ஸந்தியில் உள்ளவள் ஸந்த்யா" என்று கூறப்பட்டிருக்கிறது.

ஸந்த்யாவந்தனத்தின் அமைப்பு:

ஸந்த்யாவந்தனத்திற்கு மூன்று பகுதிகள் இருக்கின்றன. முதலாவது பகுதி 'அர்க்யம்', இரண்டாவது 'காயத்ரீ ஜபம்', மூன்றாவது 'ஸூர்ய உபஸ்தானம்' ஆகியவையே அவை.

உள்ளங்கைகளில் ஜலத்தை வைத்து (ஸூர்யனில் உள்ள தேவதையை த்யானம் செய்து) ப்ரணவ வ்யாஹ்ருதிகளுடன் (அதாவது 'ஓம் பூர்புவஸ்ஸுவ:' என்று கூறி) ஸூர்யனை நோக்கி காயத்ரீ மந்த்ரத்தினால் ஜலத்தைப் பவித்ரமாக்கி அதைக் கைகளிலிருந்து விடுவதுதான் அர்க்யம் எனப்படும். அர்க்யம் என்கிற தானத்திற்கு 'மார்ஜனம்' போன்றவை அங்கங்கள். அதனால் ஆசமனமும் மார்ஜனமும் செய்த பிறகு தான் (தானமான) அர்க்யத்தைக் கொடுக்க வேண்டும். காயத்ரீ ஜபமென்பது மந்த்ரத்தின் அர்த்தத்தைச் சிந்தித்து அல்லது ஸகுணமான ஓர் உருவத்தை த்யானம் செய்தவாறு எண்ணிக்கையுடன் காயத்ரீ மந்த்ரத்தைத் திரும்பச் திரும்பச் சொல்லுதல் ஆகும். இவ்வாறு அர்த்தத்தைச் சிந்திக்காமலோ, ஸகுண உருவத்தை த்யானம் செய்யாமலோ இருந்து விட்டால் மனத்திற்குப் பத்துத் திசைகளிலும் அலைபாய வாய்ப்புள்ள காரணத்தால் ஜபத்தின் முழுப் பலனையும் ஒருவன் அடைய முடியாது. மனம் அலையாமல் இருக்க வேண்டுமென்றால் உடல் அசையாமல் இருப்பதும் தேவை. பகவான் இந்தக் கருத்தை கீதையில்,

तत्रैकाग्रं मनः कृत्वा यतचित्तेन्द्रियक्रियः । उपविश्यासने युञ्ज्याद्योगमात्मविशुद्धये ॥

समं कायशिरोग्रीवं धारयन्नचलं स्थिरः । संप्रेक्ष्य नासिकाग्रं स्वं दिशश्चानवलोकयन् ॥ **(भगवद्गीता ६.१२-२३)**

தத்ரைகாக்³ரம்' மன: க்ரு'த்வா யதசித்தேந்த்³ரியக்ரிய: |

உபவிஶ்யாஸனே யுஞ்ஜ்யாத்³யோக³மாத்மவிஶுத்³த⁴யே ||

ஸமம்' காயஶிரோக்³ரீவம்' தா⁴ரயன்னசலம்' ஸ்தி²ர: |

ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்³ரம்' ஸ்வம்' தி³ஶஶ்சானவலோகயன் ||

**(ப⁴க³வத்³கீ³தா 6.12-23)**

(தொடரும்)

**ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## श्रीमन्नारायणीयम्

### ஶ்ரீமந்நாராயணீயம்

### पंचमं दशकम्

பஞ்சமம்’ த³ஶகம் விராட்புருஷ உற்பத்தி

शब्दाद् व्योम ततः ससर्जिथ विभो स्पर्शं ततो मारुतं
तस्मात् रूपमतो महोऽथ च रसं तोयं च गन्धं महीम् ।
एवं माधव पूर्वपूर्व कलनादाद्याद्य धर्मान्वितं
भूतग्राममिमं त्वमेव भगवन् प्राकाशयस्तामसात् ||८||


ஶப்³தா³த்³ வ்யோம தத꞉ ஸஸர்ஜித² விபோ⁴ ஸ்பர்ஶம்’ ததோ மாருதம்’
தஸ்மாத் ரூபமதோ மஹோ(அ)த² ச ரஸம்’ தோயம்’ ச க³ந்த⁴ம்’ மஹீம் .
ஏவம்’ மாத⁴வ பூர்வபூர்வ கலநாதா³த்³யாத்³ய த⁴ர்மான்விதம்’
பூ⁴தக்³ராமமிமம்’ த்வமேவ ப⁴க³வன் ப்ராகாஶயஸ்தாமஸாத் ||8||



ஓ குருவாயூரப்பா! தாங்கள் தாமஸாஹங்காரத்தின் அம்சத்தால், சப்தத்திலிருந்து ஆகாசத்தையும், ஆகாசத்திலிருந்து ஸ்பர்சத்தையும், ஸ்பர்சத்திலிருந்து வாயுவையும். வாயுவிலிருந்து ரூபத்தையும், ரூபத்திலிருந்து தேஜஸையும், தேஜஸிலிருந்து ரஸத்தையும், ரஸத்திலிருந்து ஜலத்தையும், ஜலத்திலிருந்து க'ந்த'த்தையும், க'ந்த'த்திலிருந்து பூமியையும் ஸ்ருஷ்டித்தீர்கள். ஹே ப்ரபோ! க்ரமமாக முன்னம் உண்டானவைகளின் தர்மங்களுடன் கூடின பஞ்ச பூதங்களின் கூட்டத்தையும் தாங்களே ஸ்ருஷ்டித்தீர்களன்றோ? ஹே ப்ரபோ என் வியாதி கூட்டத்தை போக்கியருளும்.

एते भूतगणाः तथेन्द्रियगणा देवाश्च जाताः पृथक्
नो शेकुर्भुवनाण्ड निर्मितिविधौ देवैरमीभिस्तदा ।
त्वं नानाविध सूक्तिभिः नुतगुणः तत्वान्यमून्याविशन्
चेष्टाशक्तिमुदीर्य तानि घटयन् हैरण्यमण्डं व्यधाः ||९||


ஏதே பூ⁴தக³ணா꞉ ததே²ந்த்³ரியக³ணா தே³வாஶ்ச ஜாதா꞉ ப்ரு’த²க்
நோ ஶேகுர்பு⁴வனாண்ட³ நிர்மிதிவிதௌ⁴ தே³வைரமீபி⁴ஸ்ததா³ |
த்வம்’ நானாவித⁴ ஸூக்திபி⁴꞉ நுதகு³ண꞉ தத்த்வான்யமூன்யாவிஶன்
சேஷ்டாஶக்திமுதீ³ர்ய தானி க⁴டயன் ஹைரண்யமண்ட³ம்’ வ்யதா⁴꞉ ||9||



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஓ குருவாயூரப்பா! இதுவரை தோன்றிய பூதக் கூட்டங்களும், இந்திரியக் கூட்டங்களும் அதனதன் அபிமானி தேவதைகளும் தனித்தனியே இருந்தமையால் அவை ப்ரம்மாண்டத்தை ஸ்ருஷ்டிக்க சக்தி பெற்றிருக்கவில்லை. அப்பொழுது தேவர்கள் ஹே குருவாயூரப்பா தங்களை துதிக்கலானார்கள். உடன் தாங்கள் மஹதாதி தத்வங்களில் ப்ரவேசித்தீர்கள்; அவற்றிற்கு க்ரியா சக்தியையும் கொடுத்து ஒன்று சேர்த்தீர்கள்; பிறகு ஸவர்ணமயமான ப்ரம்மாண்டத்தை ஸ்ருஷ்டித்தீர்கள். அப்படிபட்ட என் குருவாயூரப்பா என் வியாதி கூட்டத்தை போக்கியருளும்.



अण्डं तत्खलु पूर्वसृष्ट सलिलेऽतिष्ठत् सहस्त्रं समाः
निर्भिन्दन्नकृथाः चतुर्दश जगद् रूपं विराडाह्वयम् ।
साहस्त्रैः करपाद मूर्धनिवहैः निःशेष जीवात्मको
निर्भातोऽसि मरुत्पुराधिप समां त्रायस्व सर्वामयात् ॥१०॥

அண்ட³ம்’ தத்க²லு பூர்வஸ்ரு’ஷ்ட ஸலிலே(அ)திஷ்ட²த்
ஸஹஸ்த்ரம்’ ஸமா:
நிர்பி⁴ந்த³ன்னக்ரு’தா²: சதுர்த³ஶ ஜக³த்³ ரூபம்’ விராடா³ஹ்வயம்
|
ஸாஹஸ்த்ரை: கரபாத³ மூர்த⁴னிவஹை: நி:ஶேஷ
ஜீவாத்மகோ
நிர்பா⁴தோ(அ)ஸி மருத்புராதி⁴ப ஸமாம்’ த்ராயஸ்வ
ஸர்வாமயாத் ||10||

ஓ குருவாயூரப்பா! தாங்கள் முதலில் ஜலத்தை ஸ்ருஷ்டித்தீர்கள். ப்ரம்மாண்டமானது அதில் ஆயிரம் வருஷங்கள் இருந்தது. அதைப் பிளந்து கொண்டு பதினான்கு லோக ரூபமான விராட் ரூபத்தைத் தரித்தீர்கள். ஆயிரக்கணக்கான கை, கால், தலைகளுடன் ஸகல ஜீவராசிகளின் ரூபமாகத் தோன்றினீர்கள். அப்படிப்பட்ட தாங்கள் என்னை சகல விதமான ரோகத்திலிருந்தும் காக்கவேண்டும் என ஸ்ரீ நம்பூதிரி பகவானிடம் தன மனம் உருகி வேண்ட, ஸ்ரீ கிருஷ்ண பகவான் தன்னுடைய தலையை அசைத்து "அப்படியே ஆகட்டும்" என்று அங்கீகரித்தார்.

Our Mail ID : Info@voiceofjagadguru.com

(தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# श्री रुद्रप्रश्नः

## ஸ்ரீ ருத்³ரப்ரஶ்ன:



ஸ்ரீ ருத்ராத்யாயப்ரச்ன மஹாமந்திரமாகிய இதற்கு அகோரர் ரிஷி; அனுஷ்டுப் சந்தம்; ஸங்கர்ஷண மூர்த்தி ஸ்வரூபராகிய எந்த ஆதித்திய பரமபுருஷர் நம்முன் பிரத்யக்ஷமாய்த் தோன்றுகிறாரோ அவரே ருத்ரராகிய தேவதை. 'நம: சிவாய' என்பது பீஜம்; 'சிவதராய' என்பது சக்தி; மஹா தேவாய' என்பது கீலகம்; ஸ்ரீஸாம்பஸதாசிவரின் திருவருள் சித்திக்கும் பொருட்டு ஜபத்தில் இதற்கு உபயோகம்.

அக்னிஹோத்ராத்மனே"தர்சபூர்ணமாஸாத்மனே', 'சாதுர்மாஸ்யாத்மனே,' 'நிரூடபசுபந்தாத்மனே' 'ஜ்யோதிஷ்டோமாத்மனே', 'ஸர்வக்ரத்வாத்மனே',

என்று கர நியாஸமும் அங்க நியாஸமும் செய்து, 'பூர்ப்பு வஸ்ஸுவரோம்' என்று தீமைகள் அணுகாவண்ணம் திக்பந்தம் செய்க. அக்னிஹோத்ரம், தர்சபூர்ணமாஸம், சாதுர்மாஸ்யம், பசுபந்தம், ஜயோதிஷ்டோமம் முதலிய கர்மாக்கள் எல்லாம் ஸ்ரீருத்ரத்தின் ஹ்ருதயம் முதலிய அங்கங்களாக நியாஸம் செய்யப்படுவதால், இக்கர்மாக்களெல்லாவற்றாலும் உண்டாகும் பயன்கள் ஸ்ரீருத்ர ஜபத்தில் அடக்கம் என்பது கருத்து.

தியானம்

நம் தியானமானது அந்த ருத்ரனை பாதாளம் முதல் ஆகாயம் வரை பரந்துள்ள இந்த பிரம்மாண்டமான உலகை விளங்கச் செய்து கொண்டிருக்கும் ஜோதிமயமான ஸ்படிக லிங்கமாக இருப்பதாயும்,. அதின் சிரசில் இருக்கும் பூர்ண சந்திரனிடமிருந்து பெருகும் அமிருத தாரைகளால் அபிஷேகம் செய்யப்பட்டவராய்க் கருதி விப்ரனானவன் விரும்பிய எண்ணம் கைகூடும் பொருட்டு ஏகநாயகனாகிய சிவனைக் எந்தவிதமான குறுகுதலும் நீட்டுதலுமில்லாத நிதானமான உச்சரிப்புடன் இடைவிடாது ருத்திரானு வாகங்களை ஜபம் செய்துகொண்டே தியானம் செய்ய வேண்டும்.

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்